இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 18.09.2026

# சர்க்காரியா கமிஷன் - பொய்யும் உண்மையும்!

மண்டபத்தில் யாரோ எழுதிக் கொடுத்ததை சட்டசபைக்குள் வந்து பேசினார் முதலமைச்சர் விஜய். 'அவையில் இல்லாதவர்கள் பற்றி உண்மைக்கு மாறாகப் பேசுவது உரிமை மீறல்' எனச் சொல்லி பேரவைத் தலைவரிடம் மனு கொடுத்துள்ளது தி.மு.க.

'என் மேஜையில் கோப்பு உள்ளது' என்று மிரட்டிக் கொண்டிருந்த விஜய், தனது மேஜையில் இருப்பதாகச் சொன்னது இந்த அதர பழசான சர்க்காரியா கமிஷன் கோப்புகள் தான் போலும்!

**புகார் கொடுத்தவரே விசாரணைக்கு வராமல், வழக்குப் போட்டவர் வாபஸ் பெற்ற வழக்கு தான் சர்க்காரியா கமிஷன் வரலாறு ஆகும். இதனை விஜய் அறியமாட்டார். ஏனென்றால் அவருக்கு எழுதிக் கொடுத்த காகிதத்தில் அது இருக்காது.**

**தி.மு.க.வில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக கட்சியில் இருந்து 1972 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டார் எம்.ஜி.ஆர். அப்போது ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க. அமைச்சர்கள் மீது பல்வேறு புகார்களை அவர் கொடுத்தார். அவசர நிலைச் சட்டத்தை எதிர்த்த காரணத்தால் இந்தப் புகாரை தி.மு.க.வுக்கு எதிராக அன்றைய பிரதமர் இந்திரா பயன்படுத்திக் கொண்டார்.**

1975 ஜூன் 26 ஆம் நாள் இந்தியாவில் அவசர நிலையை பிரகடனம் செய்தார் பிரதமர் இந்திரா.

மறுநாளே, அதனைக் கடுமையாக எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம். தலைமைச் செயற்குழுக் கூட்டம் கூடியது. அதிகாலை 4 மணிக்கு கலைஞர் தன் கைப்பட தீர்மானத்தை எழுதினார். இந்தியாவிலேயே அவசர நிலைப்பிரகடனத்துக்கு எதிராக ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் தீட்டிய தீர்க்கமான தீர்மானம் அதுதான். இந்தியா முழுக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் கைதானார்கள். இங்கு தி.மு.க. ஆட்சி இருந்ததால் யாரும் கைது செய்யப்படவில்லை.

**8.1.1976 நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் இந்திரா, இந்தியாவில் கட்டுப்பாடற்ற இரண்டு தீவுகள் இருப்பதாகச் சொன்னார். ஒன்று தி.மு.க. ஆண்ட தமிழ்நாடு. மற்றொன்று ஸ்தாபன காங்கிரசு ஆட்சி செய்த குஜராத். இதனை மனதில் வைத்து அப்படிச் சொன்னார். 20.1.1976 அன்று குஜராத் முதல்வர் பாபுபாய் படேல் சென்னை வந்தார். வடசென்னையில் நடந்த காமராசர் சிலை திறப்பு விழாவில் முதல்வர் கலைஞரும் முதல்வர் பாபுபாய் படேலும் கலந்து கொண்டனர். இது பிரதமர் இந்திராவை கோபம் கொள்ள வைத்தது. இதனால் தி.மு.க. ஆட்சி 30.1.1976 அன்று கலைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான தி.மு.க.வினர் கைதாகி சிறை வைக்கப்பட்டார்கள். சித்திரவதை செய்யப்பட்டார்கள்.**

தி.மு.க.வை மேலும் பழிவாங்கத் திட்டமிட்ட காங்கிரஸ் அரசு, நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எம்.ஜி.ஆர். கொடுத்த புகாரை தூசி தட்டி எடுத்து சர்க்காரியா தலைமையில் கமிஷன் அமைத்தது." எம்.ஜி.ஆர். கொடுத்த புகாரை வைத்துத் தான் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருந்து" என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் ஓம் மேத்தா கூறினார். இதற்காக அஞ்சவில்லை கலைஞர்.

**"இவை அனைத்தும் பழைய புகார்கள். இவை அனைத்துக்கும் பதில் அளித்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் பேசி இருக்கிறேன். மீண்டும் விசாரணை ஆணையம் அமைக்கப்படுமானால் அங்கும் சொல்வேன். எனக்கு விளக்கம் அளிப்பதற்காக மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதை வரவேற்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் பகிரங்கமாக அறிவித்தார்கள்.**

பிரதமர் இந்திரா அரசின் பழிவாங்கும் நடவடிக்கை இது என்று அன்றைய அகில இந்தியத் தலைவர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொராஜி தேசாய், பாபு ஜெகஜீவன் ராம், அசோக் மேத்தா ஆகியோர் பொதுக்கூட்ட மேடைகளில் முழங்கினார்கள்.

**சர்க்காரியா கமிஷன் விசாரணை சென்னையில் நடைபெற்றது. புகார் சொன்ன எம்.ஜி.ஆர். தன்னை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவில்லை. புகார் சொன்ன யாரும், தங்களை தி.மு.க. தரப்பால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவில்லை. அந்த விசாரணை கேலிக்கூத்தாகச் செல்வதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.**

**'நான் கொடுத்த புகார்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. சேலம் கண்ணன் எழுதிக் கொடுத்ததை நான் கொடுத்தேன்' என்று பகிரங்கமாக எம்.ஜி.ஆர். சொன்னார்.**

அடுத்து அமைந்த ஜனதா கட்சி அரசு, இந்த ஆணையத்தை ரத்து செய்யவில்லை. 'தி.மு.க. அமைச்சர்கள் மீது பிரதமர் இந்திரா போட்ட வழக்குகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்று நாமே பிரச்சாரம் செய்துள்ளோம்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் சொன்னார்கள். 'ஜனதா ஆட்சி இந்தக் கமிஷனை கலைக்க வேண்டும்' என்று ஜனதா கட்சியின் முன்னாள் செயலாளர் ராஜிந்தர் பூரி எழுதினார். 'கலைஞரைப் பழிவாங்க இந்திரா அமைத்தது தான் இந்தக் கமிஷன். அகில இந்தியத் தலைவர்கள் தலைமறைவாக இருந்த போது அவர்களை மறைத்து வைத்து காப்பாற்றியவர் கலைஞர். அதனால்தான் அவர் மீது இந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது' என்று ராஜிந்தர் பூரி எழுதினார்.

'நெருக்கடி நிலையை எதிர்த்தார் என்பதற்காகத் தான் கலைஞர் மீது சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. அவர் மீது பழிதூற்றி அரசியல் ரீதியாக வஞ்சம் தீர்ப்பதற்காகத் தான் சர்க்காரியா கமிஷனை இந்திரா அமைத்தார்' என்று பகிரங்கமாக மேடையில் பேசினார் சந்திரசேகர். (பிற்காலத்தில் பிரதமராக இருந்தவர்)

**1977 ஆம் ஆண்டு பதவியை இழந்த பின்னர், மனம் மாறினார் இந்திரா காந்தி. நெருக்கடி நிலைக் காலத்தில் அனைத்துத் தவறுகளுக்கும் மன்னிப்புக் கோரினார் இந்திரா. (23.1.1978)**

**சென்னையில் நடைபெற்ற தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவுக்கு வருகை தந்த இந்திரா காந்தியிடம் சர்க்காரியா கமிஷன் பற்றி நிருபர்கள் கேட்டார்கள். "இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், அ.தி.மு.க.வும் என்னை வற்புறுத்தினார்கள். அதனால் சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது" என்று பதில் அளித்தார் இந்திரா. (30.9.1979)**

அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய இந்திரா, "நாங்கள் தவறு செய்திருக்கிறோம். அதை உணர்ந்து நாங்கள் செய்த தவறுகளை ஏற்றுக் கொண்டு, அந்தத் தவறுகளால் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்" என்று பகிரங்கமாகச் சொன்னார்.

சர்க்காரியா கமிஷன் விசாரணையை வைத்து இரண்டே இரண்டு வழக்குகளை சி.பி.ஐ. தாக்கல் செய்தது. 14.5.1981 அன்று நீதிமன்றத்தில் ஆஜரான சி.பி.ஐ. வழக்கறிஞர் நம்பீசன், 'இரண்டு வழக்குகளையும் தொடர்ந்து நடத்த ஆதாரங்கள் இல்லை' என்று குறிப்பிட்டார். அதனடிப்படையில் அந்த இரண்டு வழக்குகளையும் சி.பி.ஐ. நீதிமன்றம் 16.5.1981 அன்று தள்ளுபடி செய்தது. இது தான் சர்க்காரியா கமிஷன் சரிந்த வரலாறு ஆகும்.

அரசியல் காரணங்களுக்காக புகார் கொடுத்து, அரசியல் நோக்கத்துக்காக கமிஷன் அமைக்கப்பட்டு, ஆதாரம் இல்லாமல் திரும்பப் பெறப்பட்ட வழக்குதான் சர்க்காரியா கமிஷன் வழக்குகள் ஆகும். இந்த வரலாறு ஏதும் தெரியாமல் கதாகாலட்சேபம் நடத்திக் கொண்டு இருக்கிறார் விஜய்.

## உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வாதாடிய

# இராமசாமி படையாட்சியாருக்கு புகழ் வணக்கம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, செப். 18-

**"உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வாதாடிய இராமசாமி படையாட்சியாருக்கு புகழ் வணக்கம்" செலுத்தி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

விடுதலைப் போராட்ட வீரரும் சமூகநீதிப் போராளியுமான இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளில் மக்கள் பணியாற்றிய மாபெரும் தலைவரும், பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் பங்களித்த சமூகநீதிப் போராளியுமான ஐயா இராமசாமி படையாட்சி அவர்களின் பிறந்தநாளில் அவரது பணிகளை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

அவரது கோரிக்கையை ஏற்று ஏ.என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், சென்னை கிண்டியில் திருவுருவச் சிலை என இராமசாமி படையாட்சியாரைப் போற்றி வணங்கியது கழக அரசு.

உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வாதாடிய இராமசாமி படையாட்சியாருக்கு என் புகழ் வணக்கம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்

## இடைத்தேர்தல்: தி.மு.கழகத்தை ஆதரித்து

# ம.ஜ.க. தலைவர் தமிமுன் அன்சாரி பிரச்சாரம்!

### பணிக்குழுக்கள் அமைப்பு!



சென்னை, செப்.18-

சென்னையில் மனிதநேய ஜனநாயக கட்சி தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் தலைவரும், சிதம்பரம் எம்.எல்.ஏ.வுமான தமிமுன் அன்சாரி உத்தரவின் பேரில், தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர், மனிதநேய ஜனநாயக கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் கலைக் குயில் இப்ராஹிம் கூறுகையில், "தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தேர்தல் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இரு தொகுதிகளிலும் தேர்தல் பணிகளில் கட்சி நிர்வாகிகள் ஈடுபடுவார்கள். மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் ம.ஜ.க. தலைவர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. பிரச்சாரம் மேற்கொள்வார்.

தாராபுரம் தொகுதி தேர்தல் பணிக் குழுவில், திருப்பூர் மாவட்டச் செயலாளர் ராயல் ராஜா, மனித உரிமை அணி மாநிலச் செயலாளர் கண்ணன், திருப்பூர் மாவட்ட அமைப்புத் தலைவர் யாசர், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராயல் பாட்ஷா மற்றும் ஜெய்லானி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மதுராந்தகம் தொகுதி தேர்தல் பணிக்குழுவில், மாநில துணைச் செயலாளர் தாரிக், செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் ஜாஹிர், மாவட்டப் பொருளாளர் நிஹலாத் மற்றும் மாவட்டதுணைச் செயலாளர் இம்ரான் வேஷ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்" என்றார்.

## சென்னை - பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டும் திட்ட

# அரசாணையை ரத்து செய்யத் தவறினால் போராட்டம் வெடிக்கும்!

## சென்னையில் நடைபெற்ற 56 மீனவ கிராம மக்கள் கூட்டத்தில் முடிவு!



சென்னை, செப். 18 -

**சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் தமிழக அரசின் திட்டத்தை கைவிடக் கோரி, பட்டினப்பாக்கம் கடற்கரை பகுதியில் 56 மீனவ கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்ற அவசர கலந்தாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில், அரசாணையை திரும்பப் பெறாவிட்டால், தொடர் போராட்டங்களை நடத்துவது, அதற்கு முன்னோட்டமாக வீடுகளில் கருப்புக்கொடி போராட்டம் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

தமிழக அரசு கடந்த 8ம் தேதி வெளியிட்ட அரசாணை அடிப்படையில், சென்னை மயிலாப்பூர் வட்டம், பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுமார் ரூ.1,200 கோடி மதிப்பில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பட்டினப்பாக்கம் பகுதியில் பல்வேறு நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மீனவ கிராமங்களான முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம், முள்ளி மாநகர், நம்பிக்கை நகர் உள்ளிட்ட மீனவப் பகுதிகளில் பல தலைமுறைகளாக வசித்து வரும் மக்களின் குடியிருப்பு மற்றும் நில உரிமைகள் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. மேலும், மீன் பிடித்தல், படகுகளை நிறுத்துதல், மீன்பிடி வலைகளை பின்னுதல் மற்றும் உலர்த்துதல், மீன்களை உலர்த்தி விற்பனை செய்தல் உள்ளிட்ட தங்களது பாரம்பரிய கடலோரத் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்களின் நில உரிமைகள் தொடர்பாக 1957ம் ஆண்டு மற்றும் 2019ம் ஆண்டு கடலோர ஒழுங்கு முறை மண்டல அறிவிக்கை ஆகியவற்றை சுட்டிக்காட்டி, தங்களது வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் முடிவை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்காக பட்டினப்பாக்கம் கடற்கரை பகுதியில் அவசர கலந்தாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

எண்ணூர் நெட்டுக்குப்பம் முதல் கோவளம் வரையிலான 56 மீனவ கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். புதிய தலைமைச் செயலகத் திட்டத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் மட்டுமின்றி, அப்பகுதியில் ஏற்கனவே நிலவி வரும் போக்குவரத்து நெரிசலும் மேலும் அதிகரிக்கும். பட்டினப்பாக்கம் பகுதியில் பிரதான சாலை மற்றும் இணைப்புச் சாலை என குறைந்த எண்ணிக்கையிலான சாலைகளே உள்ள நிலையில், தலைமைச் செயலகம் போன்ற மிகப்பெரிய அரசு வளாகம் அமைந்தால் தினசரி வாகனப் போக்கு வரத்து கணிசமாக அதிகரிக்கும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

முதல்வர் 17ம் தேதி தமிழ்நாடு திரும்புவதாக கூறப்படுகிறது. அதன் பிறகு மேலும் 3 நாட்கள் காத்திருப்போம். 21ம் தேதிக்குள் அரசாணையை ரத்து செய்ய வேண்டும். அதையும் மீறி ஒரு செங்கல்லை கூட நட்டால், அரசு பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும். மேலும், புதிய தலைமைச் செயலகத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கும் பட்சத்தில், மீனவ கிராம மக்கள் ஒன்றிணைந்து தொடர் போராட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்தனர். கடலில் இறங்கி போராட்டம் நடத்துவது, சாலை மறியல், தொடர் ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும், தேவையான கட்டத்தில் முதலமைச்சர் விஜய்யின் பட்டினப் பாக்கம் இல்லம் மற்றும் பனையூரில் உள்ள இல்லத்தை முற்றுகையிடும் போராட்டத்தையும் அறிவிக்க நேரிடலாம் எனவும் மீனவ கிராம பிரதிநிதிகள் கூறினர்.

அரசு உடனடியாக அரசாணையை திரும்பப் பெற்று, புதிய தலைமைச் செயலக திட்டத்தை மாற்று இடத்தில் செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் அனைத்து மீனவ கிராம மக்களையும் ஒருங்கிணைத்து தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று கலந்தாய்வுக் கூட்டத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அரசு தங்களது கோரிக்கையை ஏற்காவிட்டால், ஆரம்பகட்ட எதிர்ப்பை தொடர்ந்து போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். 9 கிராமங்களில் இருந்து மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மீனவ மக்களையும் ஒருங்கிணைத்து பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்றும் மீனவ கிராம பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே, கூடங்குளம் அணு உலைக்கு எதிராக மீனவர்கள் பெரிய அளவில் போராட்டத்தை நடத்தி உலகின் கவனத்தை ஈர்த்தனர். அதேபோன்றதொரு போராட்டத்தை சென்னை மீனவர்கள் நடத்துவர்கள் என்றும் அவர்கள் அரசை எச்சரித்தனர்.